

அமரர்

# ஐயாத்துரை சுந்தரலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சுந்தர தீபம்

19.06.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நயினாதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் வாழ்ந்து தற்போது இல 427, கோயில் வீதி
நல்லூரில் வசித்தவருமான

# அமரர் ஐயாத்துரை சுந்தரலிங்கம்

*( சோதிடர், ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)*

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சுந்தர தீபம்

**19.06.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நயினையம் பதியில் ஆட்சி
கொண்டமரும் நாகபூஷணி
அம்பிகை துணையுடன்,
குலதெய்வம் மாணிக்கப்பிள்ளையாரையும்
இரட்டங்காலி முருகப் பெருமானையும்
உள்ளன்போடு வாழ்நாள் முழுவதும்
வாழ்த்தி வணங்கி வான் கதியடைந்த
எமது தந்தையாரின் ஆத்மா சாந்தி பெற
நாம் வணங்கித் துதித்து நினைவு மலர்தனை
அவரது பாதமதில் வைத்து வணங்குகின்றோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் திங்களுமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடனருளிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொரு தூதுவர் நலியாதே
அசந்தபோதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசைமேவிய பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.



**தோற்றம்**
**30.07.1932**

**மறைவு**
**21.05.2017**

# அமரர்
# ஐயாத்துரை சுந்தரலிங்கம்
அவர்கள்

## திதிநிர்ணய வெண்பா

ஏவிளம்பி வருடம் வைகாசித்திங்கள் ஏழாம் நாள்
அபரபக்க தசமிதிதி ஞாயிறு அதிகாலை - சோதிடர்
ஐயாத்துரை சுந்தரலிங்கம் பூராட்டாதி நட்சத்திர நன்னாளில்
நயினை வளர் நாகபூஷணி அன்னை பாதமதில் சேர்ந்தார் இனிது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடுங் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மாலைஅமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடமை எல்லாம்
குன்றே அணையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர்இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
என்னுயிர்க்கார முதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிவீழி
மிழலைவிண்ணழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற்றொன்றும்
உண்டெனவுணர் கிலேன்யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னை பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்ககளே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையன் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெரு மாளே.

## வாழ்த்து

வையக நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன் நெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை துதி

# அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி

திருச்சிற்றம்பலம்

## காப்பு

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்க மலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழித்துணையே

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும்நினைப்பது ன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ளொன்று மரும் பொரு ளேயருளே யுமையே யிமையத்
தன்றும் பிறந்த வளேயழி யாமுத்தி யானந்தமே

பூத்தவளே புவ னம்பதி னான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரத்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே யென்றும் மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண் கண்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் இ.நல்லம்மா



அமரர் சு.ஐயாத்துரை அமரர் ஐ.கமலாம்பிகை



அமரர் ஐ.அம்பிகாவதி



அமரர் ஐ.கதிர்காமலிங்கம்



அமரர் ஐ.சரவணபவன்



அமரர் ஐ.சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 1

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருப்பிரமாபுரம்**

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சீகாமரம்** **தலம் : திருச்சாய்க்காடு**

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகார் ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பஞ்சமம்** **தலம் : திருப்பனந்தாள்**

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கரவம் புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருவதிகைவீரட்டானம்**

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றாய்அடிக்கே இரவும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**தலம் : கோயில்**

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**தலம் : கோயில்**

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்து அடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப்
பொதுநீக்கி தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையை பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு ஐயாத்துரை சுந்தரலிங்கம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

***பிறப்பு:*** நயினாதீவு கருமானிப்புலம் 30.07.1932

***தொழில்:*** ஓய்வு பெற்ற தபால் ஊழியர் நயினாதீவு

***தந்தையார்:*** அமரர் சோதிடகலாநிதி சுந்தரன் ஐயாத்துரை

***தாயார்:*** அமரர் ஐயாத்துரை கமலாம்பாள்

***மனைவி :*** அமரர் சுந்தரலிங்கம் நாகமுத்து
( ஓய்வு பெற்ற பரிசாரகர், நயினாதீவு வைத்தியசாலை)

***சகோதரர்கள்:*** அமரர் நல்லம்மா இராமலிங்கம்
அமரர் ஐயாத்துரை அம்பிகாபதி
அமரர் ஐயாத்துரை கதிர்காமலிங்கம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
அமரர் சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவன்
(ஓய்வு பெற்ற அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மைத்துனர்கள்:*** அமரர் காசிப்பிள்ளை இராமலிங்கம்
அமரர் அம்பிகாவதி விசாலாட்சி
அமரர் கதிர்காமலிங்கம் நாகபூரெத்தினம்மா
திருமதி சரவணபவன் மங்கையற்கரசி

***பிள்ளைகள்:*** திருமதி கலைவாணி சண்முகலிங்கம்
திருமதி சத்தியபாமா தனிநாயகம்
திரு சுந்தரலிங்கம் கமலாகரன்
திருமதி நாகபூஷணி குகனேசன்
திருமதி தயாநிதி அகிலன்
திருமதி உமாதேவி சர்வேஸ்வரன்
திரு சுந்தரலிங்கம் கிருபாஜயாத்துரை

*ஆவாரை யாரே அழிப்பார்? அதுவன்றிச்*
*சாவாரை யாரே தவிப்பார்? ஓவாமல்*
*ஐயம்புகுவாரை யாரே விலக்குவார்*
*மெய் அம்புவி அதன் மேல்*

*- நல்வழி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்** **தலம் : திருவெண்ணெய் நல்லூர்**

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால்வெண்ணைய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருப்பெருந்துறை**

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போய்அகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்றிடச் சிவகதி தானே.

## பதினோராந் திருமுறை

### கபிலதேவநாயனார் அருளிச் செய்த

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண் டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ்இருக்க என்றார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 2

உ
திருச்சிற்றம்பலம்

### முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருத்தோணிபுரம்**

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய் பவளத் தொடுதரளம்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே.

### இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : செவ்வழி** **தலம் : திருக்கேதாரம்**

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே.

### மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : புறநீர்மை** **தலம் : திருகோணமலை**

நிரைகழல் அரவஞ் சிலம்பொலியலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தாரம்** **தலம் : திருக்கச்சியேகம்பம்**

அடுத்தானை உரித்தானை அர்ச்சுனர்க்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தனித்திருகுறுந்தொகை

**தலம் : பொது**

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருமறைக்காடு**

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருப்புன்கூர்**

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருப்பெருந்துறை**

தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு எய்திற் றிலேன்நின் திருவடிக்காம்
பவமே அருளுகண்டாய் அடியேற்கெம் பரம்பரனே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : காந்தாரம்** **தலம் : திரைலோக்கிய சுந்தரம்**

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவார்உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

## பதினோராந் திருமுறை

### சேரமான் பெருமாள் நாயனார் அருளியது

பொய்யா நரகம் புகனும் துறக்கம் புகினுங் புக்கிங்
உய்யா உடம்பினோடு ஊர்வ நடப்ப பறப்பவென்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

சொல்லுவதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி என்ன

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 3

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : வியாழக்குறிஞ்சி** **தலம் : பொது**

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு ம.்.தறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சீகாமரம்** **தலம் : ஆமத்தூர்**

குன்ற வார்சிலை நாண்அறாவரிவாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாட மாளிகை சூளிகைக்கெதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில்வந்தணையும் ஆமாத்தூர் அம்மானே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கௌசிகம்** **தலம் : பொது**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த நமச்சிவாயப் பதிகம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : பொது**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருஒற்றியூர்**

மனமெனுந் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறியவொண்ணா(து)
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருப்புள்ளிக்ருகுவேளூர்**

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
இடர் பாவம் கெடுத் தேழையேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தவத்து ளானை ஆறங்கம்
நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை** **தலம் : திருக்கேதீச்சரம்**

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழல்இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்தபொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே.

## பதினோராந் திருமுறை

### காரைக்கால் அம்மையார் அருளிச் செய்த திருவிரட்டைமணிமாலை

நீநின்று தானவர் மாமதில் மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட வாறென் றிரங்குவல் வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா டரங்காப் பெயர்ந்து நட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யும் மொய்கழற் புண்ணியனே

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 4

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருவோத்தூர்**

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங் கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வாள்அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பியந்தைக் காந்தாரம்** **தலம் : பொது**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : பொது**

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருப்பாதிரிப்புலியூர்**

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரம்தர வேண்டுமில் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த தீவண்ணனே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தது

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வேனே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருப்புக்கொளியூர்**

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை மந்திரமும்
தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே
ஆற்ற நாள் போக்கினேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : புறநீர்மை** **தலம் : திருவாரூர்**

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்றிரு வாரூர்புக்கு
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாந் தீவினையி னேற்கே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளியது

**பண் : புறநீர்மை** **தலம் : கோயில்**

கண்பனி அரும்பக் கைகள்மொட் டித்துஎன் களைகணே ஓலம்என்று ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப் பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

நிட்டையி லாவுடல் நீத்தென்னை ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும் அமிர்தினுக்கு ஆலநீழல்
பட்டனுக்கு என்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல் கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள் தெளிவார்க்கே

## பதினோராந் திருமுறை

### பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

பெற்றுகந் தேன்என்றும் அர்ச்சனை செய்யப் பெருகிநின்சீர்
கற்றுகந் தேன்என்கருத்தினி தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவனே படநாகக் கச்சின்
சுற்றுகந் தோர்விடை மேல்வரு வாய்நின் துணையடியே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 5

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : பழந்தக்கராகம் தலம் : திருவலிவலம்

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை அகற்றி
நல்லவாறே உன்றன்நாமம் நாவில் நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவல மேயவனே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : பியந்தைக் காந்தாரம் தலம் : திருநெல்வாயில் அரத்துறை

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : சாதாரி தலம் : திருப்பிரமாபுரம்

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைந கரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருவதிகைவீரட்டானம்**

நெஞ்சம்உ மக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஏப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்மிடர்
அஞ்சேலும்என் னீர்அதி கைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருவீழிமிழலை**

கண்ணி னாற்களி கூரக்கை யால்தொழுது
எண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேயடி யேனைக் குறிக்கொளே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருவையாறு**

ஓசை ஒலி யெலாமானாய் நீயே உலகுக்
கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே மலையான்
மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே பிரானாய்
அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே திருவையா
றகலாத செம்பொற் சோதீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருவொற்றியூர்**

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்பெறப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடி பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

போற்றிஓம் நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றிஓம் நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றிஓம் நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றிஓம் நமச்சி வாய சயசய போற்றி போற்றி.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : புறநீர்மை** **தலம் : திருஆதித்தேச்சரம்**

பவளமே மகுடம் பவளமே திருவாய் பவளமே திருவுடம்பு அதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல் தவளமே முறுவல் ஆடரவம்
துவளுமே கலையும் துகிலுமே ஒருபால் துடியிடை இடமருங்கு ஒருத்தி
அவளுமே ஆகில் அவரிடம் களந்தை அணிதிகழ் ஆதித்தேச் சரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

எண்ணாயிரத் தாண்டு யோகம் இருப்பினும்
கண்ஆர் அமுதினைக் கண்டு அறிவார் இல்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே.

## பதினோராந் திருமுறை

### காரைக்கால் அம்மையார் அருளியது

கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணேன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 6

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை** **தலம் : திருவண்ணாமலை**

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே!

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தாரம்** **தலம் : திருஆலவாய்**

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருஆலவாய்**

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருவாலவாய்**

வேதியா வேதகீதா விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செ யாயே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருக்குறுந்தொகை** **தலம் : பொது**

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருச்சிவபுரம்**

வானவன்காண் வானவர்க்கும் மேலானான்காண்
வடமொழியுந் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் ஆனைந்தும் ஆடினான் காண்
ஐயன் காண் கையில்அனல் ஏந்தி யாடும்
கானவன் காண் கானவனுக்கருள் செய்தான் காண்
கருதுவார் இதயத்துக் கமலத்தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான் காண்
சிவனவன் காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருக்கச்சிஏகம்பம்**

ஆலந்தானுகந் தமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையு ளானை
ஏலவார்குழ லாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருவண்ணாமலை**

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனை தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**தலம் : ஆதித்தேச்சரம்**

நீலமே கண்டம் பவளமே திருவாய் நித்திலம் நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல் நிறையஆனந்தம் பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே யென்று குழைவரே கண்டவர் உண்டது
ஆலமே ஆகில் அவரிடம் களந்தை அணிதிகழ் ஆதித்தேச் சரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு) ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட கோவினுக்(கு) என்செய
வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

## பதினோராந் திருமுறை

### சேரமான்பெருமாள் நாயனார் அருளியது

பொய்யா நரகம் புகினும் துறக்கம் புகினும் புக்கிங்
குய்யா வுடம்பினோ டூர்வ நடப்ப பறப்பவென்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி என்ன.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 7

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : குறிஞ்சி** **தலம் : திருக்குற்றாலம்**

வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர் வேங்கை
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ் செய்குற்றாலம்
அம்பால் நெய்யொடு ஆடல் அமர்ந்தான் அலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருக்கேதீச்சரம்**

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : புறநீர்மை** **தலம் : திருவாலவாய்**

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : குறிஞ்சி** **தலம் : திருவாரூர்**

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருக்குறுந்தொகை** **தலம் : பொது**

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருக்கற்குடி**

வானவனை வானவர்க்கும் மேலானை
வணங்கும் அடியார் மனத்துள் மருவிப் புக்க
தேனவனைத் தேவர் தொழு கழலான்தன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனை கொல்லை விடை ஏற்றினானைக்
குழல் முழவம் இயம்பக் கூத்தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருப்பாண்டிக்கொடுமுடி**

மவு நாள்உணர் வழியும்நாள் உயிர்
போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்ற லாற்கரு
தேன்கி னர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : கோயில்**

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பெரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே.

## பதினோராந் திருமுறை

### ஐயடிகள் காடவர் கோன் அருளியது

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

தூயவெண் ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ் வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 8

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை** **தலம் : திருமறைக்காடு**

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினமலி யரவது கொடுதிவி
தலமலி சுரரசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல் குலைதர வதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவன மமர்தரு பரமனே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்** **தலம் : திருமறைக்காடு**

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : திருவீழிமிழலை**

சேடர்விண் ணோர்கட்குத் தேவர்நன் மூவிரு தொன்னூலர்
வீடர்முத் தீயர்நால் வேதத்தர் வீழி மிழலையார்
காடரங் காவுமை காணவண் டத்திமை யோர்தொழ
நாடக மாடியை யேத்தவல் லார்வினை நாசமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தாரம்** **தலம் : திருவாரூர்**

பாடிளம் பூதத்தி னானும் பவளச்செவ் வாய் வண்ணத் தானுங்
கூடிள மென்முலை யாளைக் கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருக்குறுந்தொகை** **தலம் : பொது**

வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**தலம் : திருக்கற்குடி**

எண்ணுகேன் என் சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : பொது**

காட்டூர்க்கடலே கடம்பூர்மலையே கானப்பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூரரசே கொழுநற்கொல்லேறே
பாட்டூர்ப் பலரும் பரவப்படுவாய் பனங்காட்டூரானே
மாட்டூர் அறவா மறவாதுன்னைப் பாடப் பணியாயே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

தக்கன்நற் றலையும் எச்சன்வன் றலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்டிருப் புருவம்
நெறித்தரு ளியஉருத் திரனே
அக்கணி புலித்தோ லாடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே எவர்க்கும் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங் குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

## பதினோராந் திருமுறை

### பட்டினத்து அடிகள் அருளியது

பெற்றுகந்தேன் என்றும் அர்ச்சனை செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந்தேன் என்கருத்தினி தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந்தேறும் உகந்தவனே படநாகக் கச்சின்
கற்றுகந் தேர்விடை மேல்வரு வாய்நின் துணையடியே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 9

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம் தலம் : திருக்கோளிலி**

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளி
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை தலம் : திருவாய்மூர்**

தளிரிள வளரென உமைபாடத்
தாள மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த்
தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருள்நல்கி
வெண்ணீ றணிந்தோர் சென்னியின்மேல்
வளரிள மதியமொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கௌசிகம் தலம் : திருவாலவாய்**

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தாரம்** **தலம் : திருக்கெடிலப்புனல்**

சுண்ணவெண் சந்தனச் சாந்தும், சுடர்த் திங்கள் சூளாமணியும்,
வண்ண உரிவை உடையும், வளரும் பவள நிறமும்,
அண்ணல் அரண் முரண் ஏறும், அகலம் வளாய அரவும்,
திண்ணென் கெடிலப் புனலும், உடையார் ஒருவர் தமர், நாம்!-
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

### தலம் : திருவெல்வாயில் அரத்துறை

கரும்பொப் பானைக் கரும்பினிற் கட்டியை
விரும்பொப் பானைவிண் ணோரும் அறிகிலா
அரும்பொப் பானை யரத்துறை மேவிய
சுரும்பொப் பானைக்கண் டீர்நாம் தொழுவதே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

### தலம் : திருக்கருகாவூர்

குருகாம் வயிரமாங் கூறு நாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானாம்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்
ஒருகா லுமையாளோர் பாக னுமாம்
உள்நின்ற நாவிற் குரையா டியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை** **தலம் : திருக்கேதீச்சரம்**

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத்தானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறி நின்றென்னுள் எழு பரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை யுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : காந்தாரம்** **தலம் : கோயில்**

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித்து இடபம்ஏறி
அச்சங்கொண்டு அமரர் ஓட
நின்ற அம்பல வர்க்கு அல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக்காணா கண்வாய்
பேசாதுஅப் பேய்களோடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உளறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டுக் கூறுதுமே

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

கற்றுஞ் சிவஞானம் இல்லா கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே.

## பதினோராந் திருமுறை

### கபிலதேவநாயனார் அருளிச் செய்த

கைம்மையி னால் நின் கழல்பரவாதுகண்டார்க் கிவனோர்
வன்மைய னேஎன்னும் வண்ணம் நடித்து விழுப்பொருளோ
டிம்மையில் யான்எய்தும் இன்பம்கருதித் திரிதருமத்
தன்மைய னேற்கும் அருளுதியோ சொல்லு சம்பந்தனே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

அண்ணலே எனையாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்தநின்கோலம்
நண்ணிநான் தொழநயந் தருள்புரி எனப் பணிந்தார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 10

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : நட்டபாடை தலம் : திருமருகல்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகனி லாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங் கெரி ஏந்தியாடுங்
கணபதீ ச்சரம் காமுறவே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : கந்தார பஞ்சமம் தலம் : திருவாவடுதுறை

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : புறநீர்மை** **தலம் : திருகோணமலை**

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தாரம்** **தலம் : திருவையாறு**

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர் பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருமறைக்காடு**

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாந் திருமுறை

## திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

### தலம் : திருவாரூர்

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் கச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தி லருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே.

## ஏழாந் திருமுறை

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பஞ்சமம்** **தலம் : திருநொடித்தான்மலை**

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான் மலை உத்தமனே.

## எட்டாம் திருமுறை

## மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

செழுங்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியர்உடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவீழிமிழலை**

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனக மாளிகை கலந்தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவிதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா !
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்னடிக் கீழது என்னுயிரே.

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்கு அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இணையடி இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராந் திருமுறை
## கபிலதேவர் அருளியது

சிந்தனை செய்ய மனம் அமைத் தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத் தேன்கை தொழஅமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பு சுமைத்தேன் மெய் அரும்ப வைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற் கிவையான் விதித்தனவே.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

கானவர் பெருமா னார்தம்கண்ணிடந்து அப்பும் போதும்
ஊன்அமுது உகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா உள்ள
வானவர் வளர் பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 11

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : தூங்கானைமாடம்**

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை உடைத்தாய வாழ்க்கை ஒழியத் தவம்
அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லா மடிக ளடிநிழற்கீ ழாள் ஆம் வண்ணம்,
கிடங்கும் மதிலும் சுலாவிளங்கும் கெழுமனைகள் தோறுமறையின் ணொலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந்தொழுமின்களே

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியது

**பண் : வியாழக்குறிஞ்சி** **தலம் : திருச்சிவபுரம்**

மறையவன் மதியவன் மலையவன் நிலையவன்
நிறையவ னுமையவள் மகிழ்நட நவில்பவன்
இறையவ னிமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவ னெமை யுடையவனே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவெண்டுறை**

ஆதியன் ஆதிரையன் அனல்ஆடிய ஆரழகன்
பாதியோர் மாதினோடும் பயிலும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புனலோடர வம்புனைந்த
வேதியன் மாதுமையாள் விரும்புமிடம் வெண்டுறையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

### பண் : திருநேரிசை

கற்றிலேன் கலைகள் ஞானங் கற்றவர் தங்களோடும்
உற்றிலேன் ஆதலாலே உணர்வுக்கும் சேயனானேன்
பெற்றிலேன் பெருந்தடங்கட் பேதைமார் தமக்கும்பொல்லேன்
எற்றுளேன் இறைவனேநா னென்செய்வான் தோன்றினேனே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

### தலம் : திருவீழிமிழலை

கண்ணி னாற்களி கூரக்கை யால்தொழுது
எண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேயடி யேனைக் குறிக்கொளே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

### தலம் : திருநாகேச்சரம்

தாயவனை வானோர்க்கும் ஏனோருக்கும்
தலையவனை மலையவனை உலக மெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறிய வொண்ணா
மாயவனை மறையவனை மறையோர்
தங்கள் மந்திரனைத் தந்திரனை வளராநின்ற
தீயவனைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லிக் கௌவாணம்** **தலம் : திருவாரூர்**

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருப்பெருந்துறை**

இன்றெனக்கருளி இருள்கடிந்து உள்ளத்தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம் திருப்பெருந்துறை
-யுறைசிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன்றில்லை யாருன்னை அறியகிற்பாரே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவீழிமிழலை**

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணாரிளங் கொங்கையிற் குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

அரகர என்ன அரியது ஒன்றும் இல்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே

## பதினோராந் திருமுறை

### நம்பியாண்டார் நம்பி அருளியது

சுடலைப் பொடியும் படுதலை மாலையும் சூழ்ந்தஎன்பும்
மடலைப் பொடிமலர் மாலைமென் தோள்மேல் மயிர்க்கயிறும்
அடலைப்பொலி அயில்மூவிலை வேலும் அணிகொள்தில்லை
விடலைக்கென் ஆனைக்கு அழகிதுவேத வினோதத்தையே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 12

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : வியாழக்குறிஞ்சி தலம் : திருக்கைச்சின்னம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : இந்தளம் தலம் : திருவையாறு

கூறு பெண் உடைகோவணம் உண்பதும் வெண்டலை
மாறி லாருங்கொள் வாரில்லை மார்பில் அணிகலம்
ஏறும் ஏறித்திரி வர்இமை யோர்தொழுது ஏத்தவே
ஆறு நான்குஞ்சொன் னானும் ஐயாறுடை ஐயனே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : காந்தாரபஞ்சமம் தலம் : திருக்கருக்குடி

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்தும் நின்மலன்
கனைகடல் வையகம் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருஒற்றியூர்**

ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளதோர்
கொடுமை வைத்துக்
காம்பிலா மூளை போலக் கருத்திற்றே
முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல
நினைக்கின்றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூ
ருடையகோவே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருப்பேரெயில்**

கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருவாவடுதுறை**

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ் சுடர்நற் சோதிமிக்க
உருவேஎன் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருப்புகலூர்**

தம்மை யேபுகழ்ந்திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யே சிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : கோயில்**

பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல்
தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார் உன்னை
வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன் நின்னை
யேஅறியும்
அறிவறி யேன் உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே.

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவீழிமிழலை**

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னை நன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ் செய்யுமாறே.

## பதினோராந் திருமுறை

## நம்பியாண்டார் நம்பி அருளியது

சிந்திக் கவும் உரை யாடவும் செம்மல ராற்கழல்கள்
வந்திக் வும்மனம் வாய்கரம் என்னும் வழிகள் பெற்றும்
சந்திக் கிலர்சிலர் தெண்ணர் தண்ணர் தில்லையம்பலத்துள்
அந்திக் கமர்திரு மேனிஎம் மான்தன் அருள்பெறவே.

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப்பெற்ற பேறிதனால் எற்றைக்கும் திருவருளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்
என்றார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 13

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**
**பண் : பழந்தக்கராகம் தலம் : திருநெடுங்களம்**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனே என்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மேயவனே.

## இரண்டாந் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**
**பண் : இந்தளம் தலம் : திருவெண்ணியூர்**

முத்தினை முழுவயிர த்திரள் மாணிக்கத்
தொத்தினை துளக்கமி லாதவி ளக்காய
வித்தினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அத்தனை அடையவல் லார்வினை ஓயுமே.

## மூன்றாம் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**
**பண் : அத்தாளிக்குறிஞ்சி தலம் : திருநல்லூர்**

கல்லூர்ப் பெருமணம் வேண்டாக் கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருநாகைக்காரோணம்**

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகி லுய்யலாம் நெஞ்சி னீரே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருநல்லம்**

கொல்லத்தான் நமனார் தமர் வந்தக்கால்,
இல்லத்தார் செய்ய லாவது என் ஏழைகாள்
நல்லத்தான் நமை ஆள் உடையான் கழல்
சொல்லத்தான் வல்லிரேல் துயர் தீருமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருவாரூர்**

பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசுவேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா என்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருத்தினைநகர்**

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக்கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்றமில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருப்பெருந்துறை**

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : கங்கைகொண்ட சோழேச்சரம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை
## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

## பதினோராந் திருமுறை
## நம்பியாண்டார் நம்பி அருளியது

ஏழையென் புன்மை கருதாது இடையறா அன்பெனக்கு
வாழிநின் பாதமலர்க்கே மருவ அருளுகண்டாய்
மாழைமென் நோக்கிதன் பங்க வளர்தில்லை அம்பலத்துப்
போழிளந் திங்கள் சடைமுடி மேல்வைத்த புண்ணியனே.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

தூய வெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 14

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : குறிஞ்சி தலம் : திருச்சிராப்பள்ளி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிருமே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : இந்தளம் தலம் : திருவெண்ணியூர்

சோதியைச் சுண்ணவெண் ணீறணிந் திட்டவெம்
ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை வேதியர் தாந்தொழும் வெண்ணியில்
நீதியை நினையவல் லார்வினை நில்லாவே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : பஞ்சமம் தலம் : திருவேட்டக்குடி

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் கபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளம்
தெண்டிரைகள் கொணர்ந்தெறியுந் திருவேட்டக் குடியாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருவாரூர்**

புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொரு தோலால்மூடி
ஒழுக்கறா ஒன்பதுவாய் ஒற்றுமை யொன்று மில்லை
சழக்குடை இதனுள் ஐவர் சங்கடம் பலவுஞ் செய்ய
அழிப்பனாய் வாழமாட்டேன் ஆரூர்மூ லட்டனீரே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**பண் : திருநேரிசை**

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனவன் தண்புக லூரனே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருச்செங்காட்டங்குடி**

உருகுமனத் தடியவர்க்கு ஊறும் தேனை
உம்பர்மணி முடிக்கணியை உண்மை நின்ற
பெருகு நிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணியஅந் தணர்க்குமறைப் பொருளைப் பின்னும்
முருகுவிரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகு குழல் உமைநங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருவாரூர்**

பத்திமையும் மடிமை யையுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுஇதனைப் பொருளறிந்தேன் போய்த் தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருவண்ணாமலை**

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிக்கொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

## ஒன்பதாம் திருமுறை

### திருவாலியமுதனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : நட்டராகம்** **தலம் : கோயில்**

பவளமால் வரையைப் பனிபடர்ந்து அனையதோர் படரொளிதரு திருநீறு
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்றுபொற்குழல்திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லை யுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம் தழல்மெழுகு ஒக்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

## பதினோராந் திருமுறை

## பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

பெறுகின்ற எண்ணிலி தாயாரும் பேறுறும் யானும் என்னை
உறுகின்ற துன்பங்கள்ஆயிர கோடியும் ஓய்வொடுஞ் சென்று
இறுகின்ற நாள்களும் ஆகிக் கிடந்த இடுக்கண் எல்லாம்
அறுகின்ற னதில்லை ஆளுடையான் செம்பொன் அம்பலத்தே.

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 15

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருப்பழனம்**

வேதம்ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியின் உரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பா எனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்**

முத்தினை முழுவயி ரத்திரள் மாணிக்கத்
தொத்தினைத் துளக்கமி லாதவி ளக்காய
வித்தினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அத்தனை யடையவல் லார்க்கில்லை அல்லலே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கௌசிகம்** **தலம் : திருவானைக்கா**

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும்ஏதம் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருக்குறுந்தொகை** **தலம் : கோயில்**

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**பண் : திருவாரூர்**

விடையும் ஏறுவர் வெண்டலை யிற்பலி
கடைகள் தோறுந் திரியுமெங் கண்ணுதல்
உடையுஞ் சீரை உறைவது காட்டிடை
அடைவர் போல்அரங் காக ஆரூரரே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருக்கீழ்வேளூர்**

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பா ரில்லா தானை
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப்பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையிலார்த்த
கீளானைக் கீழ்வேளூராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருக்கழிப்பாலை**

எங்கே னுமிருந்துன் அடியேன் உனை நினைத்தால்
அங்கே வந்தென்னோடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட்டு எனையாளும்
காங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## ஒன்பதாம் திருமுறை

### திருவிசைப்பா

**பண் : சாளரபாணி** **தலம் : கோயில்**

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானும் அணிதில்லைச்
செம்பொன் செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

## ஒன்பதாம் திருமுறை

### திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் அண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனகமும் அருளி
சோதிமணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

## பதினோராந் திருமுறை
## பட்டினத்துப் பிள்ளையார் அருளியது
## தலம் : திருக்கழுமலம்

ஆரணம் நான்கிற்கும் அப்பாலவன்
அறியத்துணிந்த
நாரணன் நான்முக னுக்கரியான்
நடுவாய் நிறைந்த
பூரணன் எந்தையும் புகலிப்பிரான்
பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங் கடந்த
கருப்பொருளே.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்
மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக்
கண்டார்கள்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 16

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்காரம்** **தலம் : திருக்கோலக்கா**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவ மென்கோலா.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்** **தலம் : திருக்காறாயின்**

தாயானே தந்தையு மாகிய தன்மைகள்
ஆயானே யாயநல் லன்பர்க்கு அணியானே
சேயானே சீர்திகழும் திருக் காறாயில்
மேயானே என்பவர் மேல்வினை மேவாவே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : திருவீழிமிழலை**

நஞ்சினை யுண்டிருள் கண்டர்பண் டந்தக னைச்செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழிமி ழலையார்
அஞ்சனக் கண்ணுமை பங்கினர் கங்கையங் காடிய
மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருப்பழனம்**

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருமருகல்**

பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருப்புகலூர்**

உயிரா வணமிருந்து உற்று நோக்கி உள்ளக்
கிழயி னுருவெழுதி
உயிரா வணம்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானேறேறி அமரர்
நாடாளாமே ஆரு ராண்ட
அயிரா வணமே யென்அம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருக்கழிப்பாலை**

சுரும்பார் விண்டமல ரவைதூவித் தூங்குகண்ணீர்
அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்புசெய்வன்
விரும்பே னுன்னையல்லால் ஒருதெய்வம் என்மனத்தால்
கரும்பாருங் கழனிக் கழிப்பாலை மேயானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவீழிமிழலை**

இத்தெய்வ நெறிநன் றென்று இருள் மயமாய்
பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலாது அவமும்
அறிவரோ அறிவுடையோரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
ஆளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

## பதினோராந் திருமுறை

### நம்பியாண்டார் நம்பி அருளியது

கறுத்த கண் டாஅண்ட வாணா வருபுனற் கங்கைசடை
செறுத்தசிந் தாமணி யேதில்லை யாய்என்னைத் தீவினைகள்
ஒறுத்தல்கண் டால்சிரி யாரோ பிறர்என் உறுதுயரை
அறுத்தல் செய்யாவிடின் ஆர்க்கோ வருஞ்சொல் அரும்பழியே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிஞ்சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 17

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**
**பண் : வியாழக் குறிஞ்சி** **தலம் : திருப்பிரமபுரம்**

ஆடல் அரவசைத்தான் அருமாமறை தான் வகுத்தான்
கொன்றை சூடிய செஞ்சடையான் சுடுகாடமர்ந்த பிரான்
ஏடவிழ் மாமலையாள் ஒருபாகம் அமர்ந்தடியார் ஏத்த
ஆடிய எம்மிறையூர் புகலிப்பதியாமே.

## இரண்டாந் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**
**பண் : நட்டராகம்** **தலம் : திருவழஞ்சுழி**

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

## மூன்றாம் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**
**பண் : கொல்லி** **தலம் : திருப்பிரமாபுரம்**

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில், நல்லகதிக்கு யாதும் ஓர்குறைவு இல்லை;
கண்ணில், நல்ல.ஃ.துஉறும்; கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருப்பிரமபுரம்**

அள்ளலைக் கடக்க வேண்டில் அரனையே நினைமி னீர்கள்
பொள்ளலிக்காயந் தன்னுட் புண்டரீ கத்திருந்த
வள்ளலை வானவர்க்குங் காண்பரி தாகி நின்ற
துள்ளலைத் துருத்தி யானைத் தொண்டனேன் கண்டவாறே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருவன்னியூர்**

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெல்லாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருமூலட்டானம்**

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையால் அன்று எயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருக்கடவூர்மயானம்**

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருப்பெருந்துறை**

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## ஒன்பதாம் திருமுறை

### திருவாலியமுதனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : நட்டராகம்** **தலம் : கோயில்**

அலந்து போயினேன் அம்பலக்கூத்தனே அணிதில்லை நகராளி
சிலந்தியை அரசாள்க என்று அருள்செய்த தேவதே வீசனே
உவந்த மார்க்கண் டிக்காகிஅக் காலனை உயிர்செக உதை கொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேலொற்ற வந்தருள் செய்யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை
## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

ஆரார் வந்தார்! அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் சொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

## பதினோராந் திருமுறை
## பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

காணீர் கதியொன்றும் கல்லீர் எழுத்தைந்தும்
வல்ல வண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர் அவன்புகழ்
ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும்
பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப் பிரான்கழல்
மேவுதற்கே.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணாரும் தழற்பிளம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 18

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருச்செங்காடங்குடி**

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்** **தலம் : திருக்கருப்பறியலூர்**

சுற்றமொரு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம் மேற்றும்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : பொது**

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்,
இம்மைவினை அடர்த்து எய்தும் போழ்திலும்
அம்மையினும் துணை அஞ்சு எழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருப்பயற்றூர்**

உரித்திட்டார் ஆனையின்தோல் உதிரஆறு ஒழுகியோட
விரித்திட்டார் உமையா ளஞ்சி விதிர்விதிர்த் தலக்கண் நோக்கி
தரித்திட்டார் சிறிதுபோது தரிக்கில ராகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத் திருப்பயற்று ஊரனாரே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**பண் : திருநல்லம்**

கொல்லத் தான்நம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதென் ஏழைகாள்
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருமறைக்காடு**

தூண்டு சுடரனைய சோதிகண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற்கு அரியகடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டு றையும் மணாளன் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருப்பாண்டிக்கொடுமுடி**

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனைநான்ம றக்கினுஞ்
சொல்லும் நா நமச்சிவாயவே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

**தலம் : திருவாரூர்**

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தாஉன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.

## ஒன்பதாம் திருமுறை

### திருவாலியமுதனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சிந்தை செய்ய மனம் அமைத் தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத் தேன்கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத் தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் நீறணி ஈசற்கு இவையான் விதித்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை
## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுந் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண்டு ஆருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்நல் நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

## பதினோராந் திருமுறை

குந்தி நடந்து குனித்தொருகை கோல்ஊன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

மறவாமை யான்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்த மெனுந்திரு மஞ்சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்து அர்ச்சனை செய்வார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 19

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : குறிஞ்சி** **தலம் : கோயில்**

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சீகாமரம்** **தலம் : திருப்புள்ளிருக்குவெளூர்**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயுயென்பார் தாமிருவர்
புள்ளானாற் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம் பஞ்சுரம்** **தலம் : திருப்பிரமபுரம்**

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் முன்பணியே
அமரர்கள் செய்வதும் உன் பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருவொற்றியூர்**

மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போது அறிய ஒண்ணாது
உனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருப்பூவணம்**

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமும் கீளும் தோன்றும்
ஊரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : செந்துருத்தி** **தலம் : திருவாரூர்**

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக் கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : சோழேச்சரம்**

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பண முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை
## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

புண்ணியம் செய்வார்க்கு பூஉள நீர்உள
அண்ணல் அதுகண்டு அருள்புரியாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்இறை ஈசனை
நண்ண அறியாமல் நழுவுகின்றாரே.

## பதினோராந் திருமுறை
## பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

தரித்தேன் மனத்துள் திகழ்திரு நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப னேயென்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர் ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யாரடி பூணத் தெளிந்தனனே.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்று ஆடும் மலர்ப்பாதம் ஒரு காலும் மறவாமை
குன்றாத உணர்வு உடையார் தொண்டர் ஆம் குணம் மிக்கார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 20

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : குறிஞ்சி** **தலம் : கோயில்**

செல்வ நெடுமாடஞ் சென்று சேண்ஓங்கி
செல்வ மதிதோயத் செல்வம்உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சீகாமரம்** **தலம் : திருவெண்காடு**

கண்காட்டு நுதலானுங் கனல் காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும்இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கௌசிகம்** **தலம் : திருப்பனந்தாள்**

காதலாகிக் கசந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருவிருத்தம்** **தலம் : திருவையாறு**

சிந்திப்பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருக்கயிலாயம்**

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கைலை மலையானே போற்றி போற்றி.

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : புறநீர்மை** **தலம் : திருக்கூடலையாற்றூர்**

வடிவுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணி ணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த் தைக்காக்கி ஐம்புலன்களார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னை
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இண்டுமிலித் தனிய னேற்கே.

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவாவடுதுறை**

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும் என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலுங்கயலுந் திளைக்கு நீர்த்
திருவா வடுதுறை வேந்தனோடு
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே.

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உடலாய் உயிராய் உரகம தாகிக்
கடலாய் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந் தானாகி
அடையார் பெருவழி அண்ணல் நின்றானே.

## பதினோராந் திருமுறை

### பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

புண்ணியனே என்றுபோற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்குஇனியாது கொலாம்புகல் என்னுள் வந்திட்டு
அண்ணியனே தில்லைஅம் பலவா அலர்திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப்
போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ்
செழுத்துக் காக்கி
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான்
அடியார்க் காகப்
பாங்குடை உடையுங் கீளும் பழுதில்கோ
வணமும் நெய்வார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 21

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருச்செங்காட்டங்குடி**

பாவினால் நறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் பண்மாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்த
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்** **தலம் : திருஅழுந்தூர்**

எளியாய் அரியாய் நிலநீ ரொடுநீ
வளிகா யமென வெளிமன் னியதூ
ஒளியா யுனையே தொழுதுன் னுவர்க்
களியாய் கழிப்பா லையமர்ந் தவனே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சாதாரி** **தலம் : திருஅம்பர்மாகாளம்**

கையின்மா மழுவினர் கடுவிட முண்டவெங் காளகண்டர்
செய்யமா மேனியர் ஊனம் துடைத்தலைப் பலிதிரிவார்
வையமார் பொதுவினின் மறையவர் தொழுதெழ நடமாடும்
ஐயன்மா தேவியோ டிருப்பிடம் அம்பர்மா களந்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருநாகேச்சரம்**

கச்சைசேர் அரவர் போலுங் கறையணி மிடற்றர் போலும்
பிச்சை கொண்டு உண்பர் போலும் பேரருளார் போலும்
இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச்சரவனாரே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருவாட்போக்கி**

கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும் வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீக்கவே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருக்காளத்தி**

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கைலாயத் துச்சியுள்ளான்
காளத்தியான் அவனென் கண்ணுளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருப்பாண்டிக்கொடுமுடி**

ஓவுநாள் உணர் வழியும் நாள் உயிர்
போகும்நாள் உயர் பாடைமேல்
காவுநாள் இவை என்றலாற் கரு
தேன்கிளர் புனற் காவிரி
பாவுதண் புனல் வந்தி ழிபரஞ்
சோதிப் பாண்டிக் கொடுமுடி
நாவலாஉனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள் தம்வாழ்வில் என்வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு
மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப் பாதம் இரண்டும்
வணங்குவதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

பரிந்த செஞ்சுடரோ! பரிதியோ! மின்னோ!
பவளத்தின் குழவியோ! பசும்பொன்
சொரிந்த சிந்தூரமோ! தூமணித் திரளோ!
சுந்தரத்து அரசுஇது என்ன
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வரிந்த வெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண்டு ஐயுறும்வகையே.

## ஒன்பதாம் திருமுறை

## சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதம்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராந் திருமுறை
## காரைக்கால் அம்மையார் அருளியது

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியல் ஓர்
கூற்றானை கூற்றுரவங் காய்ந்தானை வாய்த்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

எழுதா மறையளித்த எழுத்தறியும் பெருமானை
தொழு தார்வமுற நிலத்தில்தோய்ந் தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 22

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருக்கானூர்**

அந்தமாதி அயனுமாலு மார்க்கு மறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலுஞ் சென்னியும் மன்னினான்
வந்தென் உள்ளம்புகுந்து மாலைகாலை ஆடுவான்
கந்தம்மல்கு கானூர்மேய எந்தை பெம்மானே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : சீர்காழி**

நம்பொருள் நம்மக்களென்று நச்சிஇச்சை செய்துநீர்
அம்பரம்அடைந்துசால அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர் நாதன்உத்தமன் னொளிமிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சாதாரி** **தலம் : திருப்பிரம்மாபுரம்**

பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர விய பிறைக்
கண்ணியர் கடுநடை விடையினர் கழல்தொழும் அடியவர்
நண்ணிய பிணிகெட அருள்புரி பவர்நணு குயர்பதி
புண்ணிய மறையவர் நிறைபுக ழொலி புறவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

உற்றார் இலாதார்க்கு உறுதுணையாவன ஓதிநன்னூல்
கற்றால் பரவப்பெருமை உடையன காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந்தான் கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

### தலம் : திருவானைக்கா

வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்சலென்றிடும் ஆனைக்கா அண்ணலே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான்
வார்சடையான் என்னினல்லால்
ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓரூரனல்லன்
ஓருவமனில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே
கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொணாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருவிடைமருதூர்**

குற்றம்தன்னொடு குணம்பல பெருக்கி கோலநுண்ணிடை யாரொடு மயங்கி
கற்றி லேன்கலை கள்பல ஞானம் கடியவாயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற்றில்லேன் பாவியேன் பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேனெக் குய்வகை அருளாய் இடைமருதுறை எந்தைபிரானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நம்தம்மை ஆட்கொண்ட நாயகனை
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : புறநீர்மை** **தலம் : கோயில்**

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சல்என் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலி
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் சிற்றம் பலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டுக் கூறுதுமே

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமனில்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சு மவனே சமைக்க வல்லானே.

## பதினோராந் திருமுறை

### காரைக்கால் அம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

ஊர்ந்து சொரியுங் கண்ணருவி மயிர்க்கால்
தொறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப்புறம்பலைப்ப அன்பு கரைந்து
என்புள் அலைப்ப
சேர்ந்த நயனப்பயன் பெற்றுத் திளைப்ப
திருவேகம் பர்தமை
நேர்ந்த மனதில் உறவைத்தும் நீடும்
பதிகம் பாடினார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 23

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை** **தலம் : திருக்கழுமலம்**

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய
புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவ ளிணைவன
தெழிலுடை யிடவகை
கறையணி பொழில்நிறை வயலணி கழுமலம்
அமர்கனல் உருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி
கழல்தொழன் மருவுமே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சீகாமரம்** **தலம் : திருச்சாய்க்காடு**

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : பொது**

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : கோயில்**

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : பொது**

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீர் ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி என்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருவலிவலம்**

பாடுமா பாடிப்ப ணியுமா றறியேன்
பனுவுமாப னுவிப்ப ரவுமா றறியேன்
தேடுமா தேடித்திருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்
கூடுமா றெங்ஙனமோ என்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு
வாடிநீ வாளா வருந்தல்என் பானை
வலிவலந்தனில் வந்துகண் டேனே

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : புறநீர்மை** **தலம் : கோயில்**

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்துஎன்
களைகணே ஓலம்என்று ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம்பலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை
## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
ஆளாய் மணஞ்செய் குடிபிறந்த
பழஅடி யாரொடும் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உழைக்க வல்லோர் நெடு நீர்மல ரேந்திப்
பிழைப்பின்றி ஈசன் பெருந்தவம் பேணி
இழைக் கொண்ட பாதத் தினமலர் தூவி
மழைக் கொண்டல் போலவே மன்னிநில் லீரே.

## பதினோராந் திருமுறை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

கைகளுந் தலைமீதேற கண்ணில் ஆனந்த வெள்ளம்
மெய்யெல்லாம் பொழிய வேதமுதல்வரைப் பணிந்து போற்றி
ஐயனே அடியனேனை அஞ்சல் என்று அருளவல்ல
மெய்யனே என்றுவீட லாலவாய் விளம்பலுற்றார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 24

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : மேகரம்** **தலம் : திருவிராகம்**

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்
டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவை யாறே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருக்கோடிகா**

இன்று நன்றுநாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையை போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருமழபாடி**

அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருவிருத்தம்** **தலம் : திருவேகம்பம்**

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற் றென்உள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவா ரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : திருவையாறு**

நெஞ்சம் என்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் நாமத் திருவெழுத்து
அஞ்சும் தோன்ற அருளும்ஐ யாறரே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : பொது**

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருவேகம்பம்**

ஆலந்தானுகந் தமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையு ளானை
ஏலவார்குழ லாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடிநைந்துநைந் துருகி நெக்கு நெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்து
ஆடு நின்கழற் போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**தலம் : திருமுகத்தலை**

புவனநா யகனே அகவுயிர்க்கு அமுதே!
பூரணா! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணிசெய்வார்க்கு இரங்கும்
பசுபதீ! பன்னகா பரணா!
அவனி ஞாயிறு போன்று அருள்புரிந்து அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவள மாமணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே.

## பதினோராந் திருமுறை

### காரைக்கால் அம்மையார் அருளியது

எனக்கு இனிய எம்மானை ஈசனை யான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

பாடினார் பணிவுற்றார் பரிவுறும் ஆனந்தக் கூத்து
ஆடினார் அகங்குழைந்தார் அஞ்சலிதஞ் சென்னிமேல்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார் சூகரமும் அன்னமுமாய்த்
தேடினார் இருவர்க்கும் தெரிவரியார் திருமகனார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 25

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : நட்டபாடை　　　　தலம் : திருநின்றயூர்

அச்சமிலர் பாவமிலர் கேடுமில ரடியார்
நிச்சம்முறு நோயுமிலர் தாமும் நின்றியூரில்
நச்சம்மிட றுடையார் நறுங்கொன்றை நயந்தாளும்
பச்சம் முடையடிகள் திருப்பாதம் பணிவாரே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : காந்தாரம்　　　　தலம் : திருவாரூர்

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர் தார மென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினாயே
வெந்தநீ றாடியார் ஆதியார் சோதியார் வேதகீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

பண் : பழம்பஞ்சுரம்　　　　தலம் : திருக்கச்சிஏகம்பம்

பாயுமால்விடை மேலொரு பாகனே பாவைதன்னுரு மேலொருபாகனே
தூயவானவர் வேதத்துவனியே சோதிமாலெரி வேதத்துவனியே
ஆயுநன்பொருள் நுண்பொரு ளாதியே ஆலநீழல் அரும்பொருளாதியே
காயவின்மதன் பட்டது கம்பமே கண்ணுதற்பர மற்கிடங் கம்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருப்பழனம்**

ஆடினார் ஒருவர் போலு மலர்கமழ் குழலினாளைக்
கூடினார் ஒருவர் போலும் குளிர்புனல் வளைந்த திங்கள்
சூடினார் ஒருவர் போலும் தூயநன் மறைகள் நான்கும்
பாடினார் ஒருவர் போலும் பழனத்தெம் பரமனாரே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

ஏயி லானையெ னிச்சை யகம்படிக்
கோயி லானைக் குணப்பெருங் குன்றினை
வாயி லானை மனோன்மணி யைப்பெற்ற
தாயி லானைத் தழுவுமென் ஆவியே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : பொது**

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலார் காட்டாக் காலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருப்புன்கூர்**

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே.

## ஒன்பதாம் திருமுறை

### திருவாலியமுதனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : நட்டராகம்** **தலம் : கோயில்**

பவளமால் வரையைப் பனிபடர்ந்
தனையதோர் படரொளிதரு திருநீறு
குவளைமா மலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவளமாளிகை சூழ்தரு தில்லை
யுள் திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல்மெழுகு ஒக்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றும் தானென் றிரண்டில்லை என்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே.

## பதினோராந் திருமுறை

## பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

கதியே அடியவர் எய்ப்பினில் வைப்பாக் கருதிவைத்த
நிதியே நிமிர்புன் சடைஅமிர் தேநின்னை என்னுள்வைத்த
மதியே வளர்தில்லை அம்பலத் தாய்மகிழ் மாமலையாள்
பதியே பொறுத்தரு ளாய்கொடி யேன்செய்த பல்பிழையே.

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ
சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 26

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : குறிஞ்சி** **தலம் : திருஅச்சிறுபாக்கம்**

தேனினுமினியர் பாலனநீற்றர் தீங்கரும்பனையர்
தம் திருவடி தொழுவார்
ஊன் நயந்துருக உவகைகள் தருவார் உச்சி
மேலுறைபவர் ஒன்றலாதூரார்
வானகமிறந்து வையகம்வணங்க
வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையினுரிவை போர்த்த எம்மடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : இந்தளம்** **தலம் : திருக்கருப்பறியலூர்**

ஒருத்தியுமை யோடுமொரு பாகமது வாய
நிருத்தனவன் நீதியவன் நித்தன்நெறி யாய
விருத்தனவன் வேதமென அங்கமவை யோதும்
கருத்தவ னிருப்பது கருப்பறியலூரே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சாதாரி** **தலம் : திருவராகம்**

அங்கதிர் ஒளியினர் அரையிடை மிளிர்வதோர் அரவொடு
செங்கதிர் எனநிறம் அனையதோர் செழுமணி மார்பினர்
சங்கதிர் பறைகுழல் முழவினொ டிசைதரு சரிதையர்
வெங்கதிர் உறுமழு வுடையவ ரிடமெனில் விளமரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : பொது**

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தர்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்தும்
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**தலம் : பொது**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருவாரூர்**

முந்திய வல்வினைகள் தீர்ப்பான்தன்னை மூவாத
மேனி முக் கண்ணினானைச்
சந்திரனும் வெங்கதிரும் ஆயினானைச் சங்கரனைச்
சங்கக் குழையான் தன்னை
மந்திரமும் மறைப்பொருளு மானான்தன்னை
மறுமையும் இம்மையு மானான் தன்னை
அந்திரனை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்தவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லிக்கௌவாணம்** **தலம் : திருநாகைக்காரோணம்**

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடி
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருகால் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதாய் நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கதிகாரம்
காயத்திடுவாய் நின்
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

## ஒன்பதாம் திருமுறை

### திருவாலியயமுதனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**தலம் : திருப்பூவணங்கோயில்**

செம்மனக் கிழவோர் அன்புதா என்றுன்
சேவடி பார்த்திருந்து அலச
எம்மனங் குடிகொண்டு இருப்பதற்கு யானார்
என்னுடை அடிமைதான் யாதோ
அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழல் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணங் கோயில் கொண்டாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந்து அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக்கு என்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

தத்துவம் ஆடச் சதாசிவன் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே.

## பதினோராந் திருமுறை

### சேரமான் பெருமான் நாயனார் அருளியது

வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம் வைகற்கு வைகல்
பொருகின்ற போர்க்கொன்றும் ஆற்றகில்லேன் பொடி பூசிவந்துன்
அருகொன்றி நிற்க அருளுகண்டாய் அழல்வாய் அரவம்
வெருகொன்ற வெண்மதி செஞ்சடை மேல்வைத்த வேதியனே.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும் கை உழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும் எதிர் வந்தணைய.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 27

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருவலிவலம்**

தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருக்கேதீச்சரம்**

விருது குன்றமா மேருவில் நாணரவா அனலெரியம்பாய்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : சாதாரி** **தலம் : திருஅம்பர்மாகாளம்**

பரவின அடியவர் படுதுயர் கெடுப்பவர் பரிவிலார் பால்
கரவினர் கனல்அன உருவினர் படுதலைப் பலிகொடு ஏகும்
இரவினர் பகலெரி கானிடை ஆடிய வேடர் பூணும்
அரவினர் அரிவையோடு இருப்பிடம் அம்பர்மா காளமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருப்பாதிரிப்புலியூர்**

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலியூர் அரனே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**பண் : திருஇன்னம்பர்**

என்னில் ஆரும் எனக்கினி யாரில்லை
என்னிலும் இனி யானொரு வன்னுளன்
என்னு ளேஉ யிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருவாரூர்**

முத்தினை மணிதன்னை மாணிக்கத்தை மூவாத
 கற்பகத்தின் கொழுந்து தன்னைக்
கொத்தினை வயிரத்தைக் கொல்லே றூர்ந்து
 கோளரவொன் றாட்டுங் குழகன் தன்னை
பத்தனைப் பத்தர் மனத்து ளானைப்
 பரிதிபோல் திருமேனி உடையான் தன்னை
அத்தனை ஆரூரில்அம்மான் தன்னை
 அறியா தடிநாயேன் அயர்த்த வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** **தலம் : திருவையாறு**

பரவும் பரிசொன் றறியேன்நான்
பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன் யான்
கரவில் அருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்து
ஐயாறுடைய அடிகளோ.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்துதெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழல்கீழ்
விரையார்ந்த மலர்தூகேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேன் நான் சாவேனே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

செம்பொனே! பவளக்குன்றமே! நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்து
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே!
அத்தனே! பித்தனேனுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே!
சங்கரா சாட்டியக் குடியார்க்கு
இன்பனே! எங்கும் ஒழிவற நிறைந்துஏழ்
இருக்கையில் இருந்தவாறு இயம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை
## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

நிட்டையிலா வுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்கு ஆலநீழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை
## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

என்னிலும் என்னுயிர் ஆய இறைவனை
பொன்னிலும் மாமணி ஆய புனிதனை
மின்னிய எவ்வுயிர் ஆய விகிர்தனை
உன்னிலும் உன்னும் உறுவகை யாலே.

## பதினோராந் திருமுறை
## சேரமான் பெருமாள் நாயனார் அருளியது

கண்டங் கரியன் கரியீர் உரியன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான் சிறுமான் தரித்த பிரான்
பண்டன் பரமசிவன் ஓர் பிரமன் சிரமரிந்த
புண்டங் கயிலன் பயில்ஆர மார்பன் புண்ணியனே.

## பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவம் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 28

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : தக்கேசி** **தலம் : திருப்புறவம்**

பந்தமுடைய பூதம்பாடப் பாதஞ்சிலம் பார்க்க
கந்தம் மல்கு குழலிகாணக் கரிகாட் டெரியாடி
அந்தண் கடல்சூழ்ந்து அழகார்புறவம் பதியாவமர்வெய்தி
எந்தம்பெருமா னிமையோர் ஏத்த உமையோடிருந்தானே

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : குறிஞ்சி** **தலம் : திருக்கழுக்குன்றம்**

கையால் தொழுது தலைசாய்த்து உள்ளங் கசிவார்கள்
மெய்யார் குறையுந் துயரும் தீர்க்கும் விமலனார்
நெய்யாடுத லஞ்சுடையார் நிலவும் ஊர்போலும்
பைவாய் நாகங் கோடலீனும் பாசூரே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருவேட்டக்குடி**

பொன்னிய லுந்திருமேனி தன்மேற் புரிநூல் பொலிவித்து
மின்னியலும் சடை தாழ வேழவுரி போர்த்துஅரவொடாட
மன்னிய மாமறை யோர்கள் போற்றும் வலஞ்சுழி வாணர்தம்மேல்
உன்னிய சிந்தையின் நீங்ககில்லார்க்கு உயர்வாம் பிணிபோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருவிருத்தம்

### தலம் : கோயில்

படைக்கலமாக உன்நாமத் தெழுத்தஞ்சு என்நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூநீறு அணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவேன்.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

### தலம் : திருவாரூர்

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர் கோன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லிக்கெளவாணம் தலம் : திருக்கச்சூர் ஆலக்கோயில்**

முதுவாய் ஓரிகதற முதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும் மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரோ
அதுவே யாமா றிதுவோ கச்சூர் ஆலக் கோயில் அம்மானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

ஆடு கின்றிலைக் கூத்துடையான் கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வ தொன்றறியேனே.

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம் தலம் : தஞ்சை**

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம்பு அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக்கு உறவுஎன் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில் வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

சேலுங் கயலுந் திளைக்கும்
கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

உணர்வும் அவனே உயிரும்அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணரு மவன்றன்னை எண்ணலும் ஆகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னி நின்றானே.

## பதினோராந் திருமுறை

## சேரமான்பெருமாள் நாயனார் அருளியது

முனியே முருகலர் கொன்றையி னாய் என்னை மூப்பொழித்த
கனியே கழலடி அல்லாற் களைகண்மற் றொன்றும் இலேன்
இனியேல் இருந்தவஞ் செய்யேன் திருந்தஅஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கடம் ஆர்க்கினிச் சாற்றுவனே.

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

மருவியஏ ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பால்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையார்
உருகிய அன் புள்ளலைப்ப உமைதழுவக் குழைந்தவரைப்
பருகிய மெய் யுணர்வினொடும் பரவியேபுறத்தணைந்தார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 29

உ
திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : வியாழக்குறிஞ்சி** **தலம் : திருவாரூர்**

வெந்துறுவெண் மழுவாட் படையான் மணிமிடற்றான் அரையின்
ஐந்தலை ஆடரவம் அசைத்தான் அணியாரூர்ப்
பைந்தளிர்க் கொன்றையந்தாரப் பரமன்அடி பரவப் பாவம்
நைந்தறும் வந்தணையும் நாடொறும் நல்லனவே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டபாடை** **தலம் : திருக்கோவலூர்வீட்டம்**

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை எழுகபோது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன்கோ லூர்தன்னுள்
விடையதேறும் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருக்காளத்தி**

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவெண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருஆப்பாடி**

ஆதியும் அறிவுமாகி அறிவுனுட் செறிவு மாகி
சோதியுட் சுடருமாகித் தூநெறிக் கொருவனாகி
பாதியிற் பெண்ணுமாகி பரவுவார் பாங்கனாகி
வேதியர் வாழும் சேய்ஞல் விரும்பும்ஆப் பாடியாரே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளியது

**பண் : பழம்பஞ்சுரம்** **தலம் : திருசாரையூர்**

துஞ்சிருள் ஆடுவர் தூமுறுவல் துளங்கும் உடம்பினார்
அஞ்சுடரார் எரியாடுவார் அழலார் விழிக்கண்
நஞ்சுமிழ் நாகம் அரைக்கசைப் பர்நலனோங்க நாரையூர்
எஞ்சிவனார்க்கு அடிமைப்படுவார் இனி யில்லை ஏதமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**தலம் : திருச்செங்காட்ங்குடி**

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கைலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருக்களத்தி**

மறிசேர் கையினனே மத மாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேயுன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக் கும்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

## ஒன்பதாம் திருமுறை

### பூந்துருத்தி – நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **தலம் : திருவாரூர்**

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறு அமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபட உள்புகச்
சீல மயிர்க்கால் தொறுதேக் கிடுமே.

## பதினோராந் திருமுறை

## நம்பியாண்டார் நம்பி அருளியது

புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொ லாம்புகல் என்னுள் வந்திட்
அண்ணிய னேதில்லை அம்பல வாஅலர் திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே.

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

ஆனந்த வெள்ளத்தின் இடை மூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்பாதத் அமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தான் தமைக்கண்டே
ஈனந்தங் கியதிலதாம் என்னஅதி சயம் என்றார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாமாலைத் தொகுப்பு - 30

உ

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** **தலம் : திருச்சிரபுரம்**

பல்லடைந்த வெண்டலையிற் பலிகொள் வதன்றியும் போய்
வில்லடைந்த புருவநல்லாள் மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொல்மறையோடங்கங் கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ் சிரபுரம் மேயவனே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பியந்தைக்காந்தாரம்** **தலம் : திருசக்கொச்சைவயம்**

அறையும் பூம்புன லோடும் ஆடர வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பிற் பெண்ணொரு பாகம் அமர்ந்தார்
மறையின் ஒல்லொலி யோவா மந்திரவேள்வி யறாத
குறைவில் அந்தணர் வாழுங் கொச்சை வயம் அமர்ந்தாரே.

## மூன்றாம் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பஞ்சமம்** **தலம் : திருப்பணந்தாள்**

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண் மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால் விடையான்
விண்பொலி மாமதிசேர்தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள்திருத் தாடகையீச்சரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருக்கோடிகா**

நீறுமெய் பூசினானே நிழல்திகழ் மழுவி னானே
ஏறுகந் தேறினானே இருங்கடல் அமுதொப் பானே
ஆறுமோர் நான்குவேதம் அறமுரைத் தருளினானே
கூறுமோர் பெண்ணினானே கோடிகா வுடைய கோவே.

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்குறுந்தொகை

**பண் : திருமணஞ்சேரி**

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டார் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே.

## ஆறாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்

**பண் : திருநேரிசை** **தலம் : திருக்கோடிகா**

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட்கு ஆரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி உடையாய் போற்றி
நீங்காது என் னுள்ளத்து இருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமைஏ ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : கொல்லி** **தலம் : திருப்பஞ்ஞீலி**

காரு லாவிய நஞ்சை யுண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண்டு
ஊரெ லாந்திரிந் தென்செய் வீரபலி
ஓரிடத்திலே கொள்ளும் நீர்
பாரெ லாம்பணிந் தும்மை யேபர
விப்பணியும்பஞ் ஞீலியீர்
ஆர மாவது நாக மோசொலும்
ஆர ணிய விடங்கரே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## ஒன்பதாம் திருமுறை

### திருவாலியமுதனார் அருளிச் செய்த திருவிசைப்பா

**பண் : புறநீர்மை** **தலம் : கோயில் துச்சனா**

நின்று நினைந்து இருந்து கிடந்து
எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றி ஒருகால் நினையாது
இருந்தாலும் இருக்க வொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல்
கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை
நடம்பயிலும் நாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குப் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

## திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

## பதினோராந் திருமுறை

தண்ணார் புனற்தில்லைச் சிற்றம் பலம்தன்னின் மன்னிநின்ற
விண்ணாள னைக்கண்ட நாள்விருப் பாய்என் உடல்முழுதும்
கண்ணாங் கிலோதொழக் கையாங் கிலோதிரு நாமங்கள்கற்று
எண்ணாம் பரிசெங்கும் வாயாங்கிலோ எனக்கு இப்பிறப்பே.

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

தூயவெண்நீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள்

I. **கணபதிதாளம் : கொடிமரத்துக்கு அருகில்**
**பண் : தக்கராகம்**

## தேவாரம்

அ) மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ.

(சம்பந்தர்)

ஆ) பொடியுடை மார்பினர் போர்விடையேறிப்
பூதகணம் புடைசூழக்
கொடியுடை யூர்திரிந் தையங்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண்ணுமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்.

(சம்பந்தர்)

இ) துணிவளர் திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்சடை சுற்றிமு டித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெ லாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் பாண்பே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இடபதாளம், ம்ருசிகதாளம் : கொடிமரத்துக்கு அருகில்
பண் : காந்தாரபஞ்சமம்

அ) இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே.

(சம்பந்தர்)

ஆ) சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

(நாவுக்கரசர்)

இ) துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

(சம்பந்தர்)

3. சிம்மதாளம் : கொடிமரத்துக்கு அருகில்
பண் : நட்டபாடை

அ) தோடுடையசெவியன் விடையேறி யோர்தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) நத்தார்படை ஞானன்பசு வேறிந் நனைகவிழ்வாய்
மத்தம் மதயா னையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான்திருக்கேதீச் சரத்தானே

(சுந்தர்)

இ) உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

(சம்பந்தர்)

**4. மயூரதாளம் : கொடிமரத்துக்கு அருகில்**
**பண் : இந்தளம்**

அ) பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூர்
(அருட் டுறையுள்
அத்தா உனக காளாயினி அல்லே னெனலாமே

(சுந்தரர்)

ஆ) சடையாயயெனுமால் சரண்நீயெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

(சம்பந்தர்)

இ) ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே

(நாவுக்கரசர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பிரம்ம சந்தி பண் : மேகராகம்**

அ) நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

(சம்பந்தர்)

ஆ) விடையும் ஏறுவர் வெண்பொடிபூசுவர்
சடையிற் கங்கை தரித்தவர்
படைகொள் வெண்மழு வாளர்பராய்த்துறை
அடைய நின்ற அடிகளே.

(சம்பந்தர்)

இ) புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

(சம்பந்தர்)

**6. இந்திரசந்தி – கிழக்கு பண் : காந்தாரம்**

அ) மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு ஆலவாயான் திருநீறே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) கைப்போது மலர்தூவிக்காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐய்புலனும் அகத்தடக்கி
எப்போது இனியானை என்மனத்தே வைத்தேனே.

(நாவுக்கரசர்)

இ) மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடுங் களிறுவருவன கண்டேன்.
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

(நாவுக்கரசர்)

**7. அக்கினி சந்தி (தென்கிழக்கு) பண் : கொல்லி**

அ) மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல.:.துறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

(சம்பந்தர்)

ஆ) கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

(நாவுக்கரசர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) தம்மையே புகழ்ந்து இச்சைபேசினுஞ்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே, எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

(சுந்தரர்)

8. இயமசந்தி தெற்கு பண் : கௌசிகம்

அ) காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குயிப்பது
வேதம் நான்கிலும் மெய் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

(சம்பந்தர்)

ஆ) வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெ லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

(சம்பந்தர்)

இ) ஆதியந்த மாயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளோர் சோதியாய்
கீதம்வந்த வாய்ம்மையால் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்ம்மையால் உணர்ந்துரைக்க லாகுமே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**௯. நிருதி சந்தி தென்மேற்கு பண் : நட்டபாடை**

அ) அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயலார் புனற் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடுங்
கணபதி தீச்சரம் காமுறவே.

(சம்பந்தர்)

ஆ) தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

(சம்பந்தர்)

இ) வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளம் நெடுமாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே.

(சம்பந்தர்)

**10. கணபதிதாளம் : கொடிமரத்துக்க அருகில்**
**பண் : தக்கராகம்**

அ) கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) கண்காட்டு நுதலானுங் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

(சம்பந்தர்)

இ) நீ நாளும்நன் நெஞ்சே நினைகண்டாய்யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்கட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புனழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும்நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

(சம்பந்தர்)

**II. வாயுசந்தி (வடமேற்கு) பண் : தக்கேசி**

அ) பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்
தூமாமழைநின்ற திரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணை வந் தணையும் சாரல் அண்ணா மலையாரே.

(சம்பந்தர்)

ஆ) ஆலந்தானுகந் தமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையு ளானை
ஏலவார்குழ லாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனை கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

(சுந்தரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) அந்தணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்குன்றன் வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற்றென்னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூருளானே.

(சுந்தரர்)

12. குபேரசந்தி வடக்கு பண் : தக்கராகம்

அ) மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவம் என்கொலோ.

(சம்பந்தர்)

ஆ) பொடியுடை மார்பினர் போர்விடையேறிப்
பூதகணம் புடைசூழக்
கொடியுடை யூர்திரிந் தையங்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண்ணுமை பாகம்
மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்.

(சம்பந்தர்)

இ) மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப்பே சினல்லால்
குறையுடையாய் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. ஈசானன் சந்தி (வடகிழக்கு)**
**பண் : சாலபாணி (சாதாரி)**

அ) எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானெனஇ றைஞ்சிஇமையோர்
வந்துதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மை அதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே.

(சம்பந்தர்)

ஆ) தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனை
தலையே நீ வணங்காய்.

(நாவுக்கரசர்)

இ) காருலகு நரர்கள்பயில் தரணிதலம்
முரணழிய அரணமதில் முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள்
கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன் முறையி னிரை நிறைகொள்
வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுயர் அரனெழில் கொள் சரணவினை
பரவவளர் பிரபுரமே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# கொடிக்கவி

## கட்டளைக் கலித்துறை

1) ஒளிக்கும் இருளுக்கு மொன்றே யிடமொன்றுமேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

## நேரிசை வெண்பா

2) பொருளாம் பொருளேது போதேது கண்ணே(து)
இருளாம் வெளியே திரவேது அருளாளா
நீபுரவா வையமெலாம் நீஅறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

## கட்டளைக் கலித்துறை

3) வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணணர்வரிய தன்மையனை - நோக்கி
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும்அருள் நல்கக் கொடி.

4) அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்தி
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமறைக்காடு கதவு திறக்கப் பாடியது

## திருநாவுக்கரசு நாயனார் அருளியது

### திருக்குறுந்தொகை

1) பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.

2) ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே.

3) அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே.

4) அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடைவிருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே.

5) மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே.

7) வெந்த வெண்பொடி பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே.

8) ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே.

9) சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே.

10) விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
பண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

11) அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

சிவமயம்

# திருவண்ணாமலையில் அருளியது

### மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

### திருவெம்பாவை

1) ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே என்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

2) பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்கு
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

3) முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன்கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விருப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

5) மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

6) மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

7) அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோரும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) கோழி சிலம்புச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

9) முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலா ரெம்பாவாய்.

10) பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குணத்தான்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலா ரெம்பாவாய்.

11) மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல்போற்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்கில்
மையார் தடங்கண் மடந்தை மணவாளர்
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தன் நற் தில்லைச்சிற்றம் பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோ ரெம்பாவாய்.

13) பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்ப
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய்.

14) காதார் குழையாட பைம்பூண் கலனாட
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்யோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

16) முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

17) செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

19) உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கென்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

20) போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

சிவமயம்

# திருப்பொற்சுண்ணம்

## மாணிக்கவாசகவாசக சுவாமிகள் அருளியது

1) முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

2) பூவியல் வார்சடை எம்பிரார்கு
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியும் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

4) சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தார் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தி
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
பாசவினையைப் பறிந்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

6) அறுகெடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

8) உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

10) வாட்டடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கோண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

11) வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தம் சிவனொடும் ஆடஆட
செங்கயற் கண்பனி ஆடஆட
பித்தெம் பிரானொடும் ஆடஆட
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

13) மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்ப
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

14) மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே.

16) சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே.

17) ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானந் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) ஆவகை நாமும் வந்தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்துநாமே.

19) தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்துநாமே.

20) அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடி கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்துநாமே.

22) வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு
சோதிய மாய் இருள் ஆயினார்க்கு
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருப்பொன்னூசல்

### மாணிக்கவாசகவாசக சுவாமிகள் அருளியது

1) சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாய்அடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாளிணைப் பாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.

2) மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேனதங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் அனநடையீர் பொன்னூசல் ஆடாமோ.

3) முன்னீறும் ஆதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்நீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) நஞ்சமார் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோசமங்கை
அஞ்சுசொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ.

5) ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கை
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ.

6) மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

7) உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) கோலவரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகம்குழைந்து பொன்னூசல் ஆடாமோ.

9) தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

" கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு "

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்த தந்தையார் **அமரர் சோதிடர் ஐயாத்துரை சுந்தரலிங்கம்** அவர்களின் பேரிழப்பால் நாம் துயருற்றிருந்த வேளையில் உற்றதுணையாய் நின்று உதவிகள் பல புரிந்தும் நேரடியாக வருகை தந்தும் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியும் பூதஉடலை நயினாதீவு சல்லிபரவை மயானத்துக்கு கொண்டு சென்று இறுதி வரை ஒத்துழைப்புக்கள் வழங்கிய உற்றார் உறவினர் கள், நண்பர்களுக்கும் அந்தியேட்டி கிரியைகள், ஆத்மா சாந்திப் பிரார்த்தனைகள் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் வெளி யிடங்களில் உள்ள உறவினர்கள் பார்வையிடுவதற்கு இணைய வழியூடாக வசதி அமைத்துக் கொடுத்த நயினை M.குமரனுக்கும் பேரூந்து படகு உரிமையாளர் களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய நயினை தபாலக உத்தியோகத்தர்களுக்கும் தேவாரப் பதிகங் களை அச்சிட்டு தந்துதவிய நூலாசிரியர் அவர்களுக்கும் அழகுற தொகுத்து உதவிய பதிப்பாசிரியர் அவர் களுக்கும் எமது அனைத்து உறவினர்களுக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

427,கோயில் வீதி,
நல்லூர்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விரு

நயினாதீவு

**தகப்பன் வழிச்சந்ததி**

- ❖ காலிங்கராசன்
- ❖ சுந்தரராசன்
- ❖ கந்தஉடையார்
- ❖ கதிர்காம உடையார்
- ❖ வேலாயுத உடையார்
- ❖ செங்கமலையர்
- ❖ **சுந்தரன் + ❖ அபிராமி அம்மா**

↓

❖ **ஐயாத்துரை**

**தாய் வழிச்சந்ததி**

- ❖ கணபதிப்பிள்ளை
- ❖ பொன்னம்பலம்
- ❖ இராமலிங்கர்
- ❖ இராமச்சந்திரர்
- ❖ கதிரித்தம்பிநொத்தார்
- ❖ சின்னத்தம்பி நொத்தார்
- ❖ இராமநாதர்
- ❖ **நாகநாதர் + ❖ நாகமுத்து**

↓

❖ **கமலாம்பாள்**

- ❖ க
- ❖ ச
- ❖ ந

↓

- ❖ நல்லம்மா + ❖ இராமலிங்கம்
- ❖ அம்பிகாபதி + ❖ விசாலாட்சி
- ❖ கதிர்காமலிங்கம் + ❖ நாகபூரெத்தினம்மா
- ❖ சரவணபவன் + மங்கையற்கரசி
- ❖ **சுந்தரலிங்கம்** ←

↓

கலைவாணி
+
சண்முகலிங்கம்
↓
அம்பிகைரூபன்
அம்பிகை + கேதீஸ்வரன்
↓
*அட்சரா*
சிவமங்கை + அஜித்
↓
*திவ்வியன்*

சத்தியபாமா
+
தனிநாயகம்
↓
ராம்காந்த்
நிவேதிதா + கமலவேந்தன்
↓
*குமரன்*
துஜிகாந்த்
அபிராமி

கமலாகரன்
+
யோகமலர்
↓
தனுசா
அநுஷியா
ஆர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ிருட்சம்

நெடுந்தீவு கிழக்கு, 15ம் வட்டாரம்

தகப்பன் வழிச்சந்ததி

❖ கந்தையா
❖ கதிர்காமர்
**❖ நாகநாதர் + ❖ சின்னம்மா**

**❖ குருநாதர்**

தாய் வழிச்சந்ததி

❖ தம்பிரான்
❖ தனுக்கோடி
❖ ஐயம்பிள்ளை
**❖ இராமநாதர் + ❖ குஞ்சாச்சி**

**❖ சின்னக்குட்டி**

❖ அமரர்கள்

❖ நாகம்மா + ❖ சுப்பிரமணியம்
❖ பொன்னம்மா + ❖ இராமநாதன்
❖ நாகரெத்தினம் + ❖ வேலுப்பிள்ளை
பூரணம் + ❖ சுந்தரம்பிள்ளை
**❖ நாகமுத்து**
❖ தெய்வேந்திரம் + பூரணம்

நாகபூஷணி + குகனேசன்
ஜனனி

தயாநிதி + அகிலன்
ரதீபன்
ரதீசன்

உமாதேவி + ❖ சர்வேஸ்வரன்
சரண்யா
சங்கவி
பிரதீப்

கிருபாஜயாத்துரை + நந்தினி
காவியா
கிருஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும் .





இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன் பிறிண்டேர்ஸ். யாழ்ப்பாணம்.
தொ.பே: 0779176840